பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**11 01 2026** **6 45**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** தூய்மை எரிசக்தி உற்பத்தி திறன், குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

**2.** நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

**3.** தமிழகத்தை நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக உருவெடுக்கச் செய்யும் வகையில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

**4.** அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

**5.** இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி வதோதராவில் இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தூய்மை எரிசக்தி உற்பத்தி திறன், குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி கண்டு வருவதாக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவிட்டுள்ள அவர், புதைபடிமமற்ற எரிசக்தி உற்பத்தி திறன் 267 புள்ளி ஏழு எட்டு ஜிகாவாட்டாக அதிகரித்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இது கடந்த 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22 புள்ளி 6 சதவீதம் கூடுதலாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசின் உறுதியான கொள்கை முடிவுகள் நீண்டகால தொலைநோக்குப் பார்வை மற்றும் திட்டங்களை அமல்படுத்துதல் ஆகியவை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திறனை அதிகரிக்க உறுதுணையாக உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

எரிசக்தி பாதுகாப்பு, பருவநிலை மாற்றம், பசுமைப் பொருளாதாரத்திற்கான தற்சார்பு நிலை ஆகியவற்றை இலக்காகக் கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும், வரும் 2030ஆம் ஆண்டுக்குள் புதைபடிமமற்ற எரிசக்தி உற்பத்தி திறனை 500

ஜிகாவாட்டாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

உலக அளவில் இந்தியா விரைவான வளர்ச்சி கண்டு வரும் நாடாக உருவெடுத்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

கோவையில் பிஜேபி சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், உலக அரங்கில் பல்வேறு துறைகளில் இந்தியா முன்னேற்றம் கண்டுள்ளதாக தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில் நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கு சாத்தியமில்லை என்று கூறப்பட்டு வந்த நிலையில் அவை தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதை டாக்டர் எல். முருகன் சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

தமிழகத்தை நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக உருவெடுக்கச் செய்யும் வகையில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தென்காசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், வறுமையை அகற்றுவதற்கான திட்டங்களுக்கு அரசு முன்னுரிமை அளித்து செயல்படுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

அரசின் நலத்திட்டங்கள் அனைத்து மக்களையும் சென்றடைவதற்கான நடவடிக்கைகளில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

சென்னையில் அமைக்கப்பட்டு வரும் சாலைகள் மற்றும் மேம்பாலப் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர் பாபு தெரிவித்துள்ளார்.

கொளத்தூர் செந்தில்நகரில் 15 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் நடைமேம்பாலப் பணிகளை அவர் நேரில் ஆய்வு செய்தார்.

கொளத்தூர், ஜி.என்.டி. சாலை, பாடி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை மற்றும் மேம்பாலப் பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாகையில் தேசிய சாலைப் பாதுகாப்பு வார விழாவையொட்டி, பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தலைக்கவசம் அணிவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் இருசக்கர வாகனப் பேரணி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Selvan Jebaraj - 40 Sec)**

<<<<>>>>

அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை திமுக அரசு

நிறைவேற்றவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், விரைவில் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்வதற்கும், போராட்டங்களில் ஈடுபட்டு வரும் அரசு ஊழியர்களை சமாளிப்பதற்கும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தை உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டமாக அறிவித்து அரசு ஊழியர்களை ஏமாற்றியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஊதியக் குழு பரிந்துரை அடிப்படையில் ஓய்வூதியத் தொகையை நிர்ணயம் செய்யும் பழைய ஓய்வூதியத் திட்டத்தின் அம்சம் குறித்த பரிந்துரை அரசு அறிவித்துள்ள ஓய்வூதியத் திட்டத்தில் இடம்பெறவில்லை என்று திரு. எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பொங்கல் பண்டிகையை ஒட்டி மதுரை மாவட்டத்தில் நடைபெறும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் உலகப் புகழ் பெற்றவை.

இதனையொட்டி அம்மாவட்டத்தில் காளைகளை தயார்படுத்துவதற்கான பயிற்சிகள் மும்முரமாக நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Madurai - Raguraja - 44 Sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைனின் வேண்டுகோளை ஏற்று, அந்நாட்டின் மீதான ரஷ்யா அண்மையில் நடத்திய தாக்குதல் குறித்து ஐ நா பாதுகாப்புக் கவுன்சிலின் அவசரக் கூட்டம் வரும் திங்கட்கிழமை கூடி விவாதிக்கவுள்ளது.

-----------

**66** சர்வதேச அமைப்புகளிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, அத்தகைய அமைப்புக்களில் முதலீடு செய்வது பயனளிக்காது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

-----------

கடும் வெப்பம் நிலவி வரும் ஆஸ்திரேலியாவின் தென்கிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ காரணமாக மூன்று லட்சம் ஹெக்டேர் பரப்பிலான காடுகள் சேதமடைந்துள்ளது.

-----------

போலி வாக்குறுதிகளை வழங்கி மியான்மருக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சைபர் மோசடி நடவடிக்கைகளில் சட்டவிரோதமாக வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்ட 27 இந்தியர்கள் மீட்கப்பட்டு இந்தியா அழைத்து வரப்பட்டனர்.

-----------

சிக்கிம் மாநிலத்தில் பாதுகாக்கப்பட்ட மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வெளிநாட்டினர் பார்வையிடுவதற்கான அனுமதியை அம்மாநில அரசு நிறுத்தி வைத்துள்ளது.

-----------

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் பயிற்சி முடித்த வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை மத்திய ரிசர்வ் காவல்படையின் தலைமை இயக்குநர் திரு. ஞானேந்திர பிரதாப் சிங் ஏற்றுக்கொண்டார்.

-----------

ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான வரைவுப் பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு அவற்றின் மீதான மக்களின் கருத்துக்களை பெறுவதற்காக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

-----------

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள குரும்பலூர், அரும்பாவூர், பூவாம்பாடி பேரூராட்சிகளில் நடைபெற்றுவரும் வளர்ச்சித் திட்டாய் பணிகளை ஆட்சியர் மிருணாளினி ஆய்வு செய்தார்.

-----------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஆட்டுச் சந்தைகளில் பொங்கல் பண்டிகையையொட்டி நான்கு கோடி ரூபாய்க்கு ஆடுகள் விற்பனை நடைபெற்றன.

-----------

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் போக்குவரத்து விதிகளை பராமரிக்கவும், குற்றச் சம்பவங்களைத் தடுக்கவும் 2,500 கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

வதோதராவில் இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

---------

19 வயத்துக்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான பயிற்சி ஆட்டத்தில் இந்திய அணி 121 ரன் வித்தியாசத்தில் ஸ்காட்லாந்து அணியை வென்றது.

------------

மகளிர் பிரிமியர் லீக் போட்டியில் மும்பை அணி 50 ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

மும்பையில் நேற்றிரவு நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட இருபது ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 195 ரன் எடுத்தது.

பின்னர் 196 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய தில்லி அணி 19 ஓவரில் 145 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

நவி மும்பையில் இன்றிரவு ஏழரை மணிக்கு நடைபெறும் போட்டியில் தில்லி அணு குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

----------

மகளிர் ஹாக்கி இந்தியா லீக் போட்டியில், தில்லி அணி சாம்பியன் பட்டம் வென்றது.

**<<<<The End>>>>**